பாடம் 3 ஜூலை 18, 2026



# கிறிஸ்துவில் ஒற்றுமை


“சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும்
உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்
நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.” (1 கொரிந்தியர் 1:10)

கொரிந்தியர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக அவர்களை பாராட்டியப்பிறகு, அந்த சபையை பாதிக்கும் பிரச்சனைகளில் முதலாவதான “ஒற்றுமையின்மை” குறித்து பவுல் பேச தொடங்குகிறார்.

கொரிந்தியர்களுக்கு பவுல் எழுதிய நிருபங்கள் மற்றும் அவர் எழுதிய பிற நிருபங்கள் முழுவதிலும், இன்றும் திருச்சபைகளை பாதிக்கக்கூடிய இந்த பிரச்சனையை தீர்ப்பதற்கான வழிகாட்டுதல்களை அவர் எவ்வாறு வழங்குகிறார் என்பதை நாம் காண்கிறோம்.



தொடக்கத்திலிருந்தே தெளிவாக உள்ளது: திருச்சபையில் ஒற்றுமையை மனித முயற்சியால் அடைய முடியாது. இயேசுவின் மீது கவனம் செலுத்துவதன் மூலமாகவே நாம் ஒற்றுமையை அடைய முடியும்.



ஒற்றுமையின்மை ஏற்படுத்தும் சிக்கல்கள்:

- பிரிவினைகளும் கருத்துவேறுபாடுகளும்

ஒற்றுமையை எவ்வாறு தக்கவைப்பது:

- இயேசுவில் ஒற்றுமை
- ஞானமும் பக்குவமும்
- சேவையும் தாழ்மையும்
- தலைவர்கள் மீதான மரியாதை

# ஒற்றுமையின்மை
# ஏற்படுத்தும் சிக்கல்கள்

# பிரிவினைகளும் கருத்துவேறுபாடுகளும்

"சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்." (1 கொரிந்தியர் 1:10)



## கொரிந்து சபையில் காணப்பட்ட பிரிவுகள் யாவை (1 கொரி. 1:12)?



பல்வேறு தலைவர்கள் கொரிந்து வழியாக சென்றிருக்கிறனர், மேலும் ஒவ்வொரு விசுவாசிக்கும் தனக்கு பிடித்தமான போதகர் இருந்தார் (பவுல், அப்பொல்லோ, பேதுரு...) இது அவர்களுக்கு இடையே கருத்து வேறுபாடுகளை உருவாக்கும் நிலையை எட்டியிருந்தது (1 கொரி. 1:11).

அவர்கள் அனைவரும் ஒரு பொதுவான செய்தியை போதித்துக் கொண்டிருந்தார்கள் என்பதை உணராமல், அவர்கள் தேவையற்ற அம்சங்களில் கவனம் செலுத்தினர்(1 கொரி. 3:5-8).





மெல்ல மெல்ல, திருச்சபையின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது (1 கொரி. 3:3). ஒற்றுமையின்மை தேவனுடைய திருவிருந்து ஆசரிப்பையும் பாதித்தது (1 கொரி. 11:33), அவர்கள் ஒருவரையொருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும் அளவுக்குக்கூட சென்றனர் (1 கொரி. 6:1).

# ஒற்றுமையை எவ்வாறு தக்கவைப்பது?

# இயேசுவில் ஒற்றுமை

**"தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்." (1 கொரிந்தியர் 1:9)**



"கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?(1 கொரிந்தியர் 1:13). இந்த கேள்விகள் மூலம், அவர்கள் சிந்திக்குமாறு பவுல் விரும்புகிறார்.

இயேசுவை நம் ஆண்டவராக கொண்டிருப்பதன் மூலமே ஐக்கியத்தை அடைய முடியும். ஒரு சகோதரர் அல்லது சகோதரியின் எண்ணங்கள் அல்லது கருத்துக்களை பின்பற்றுவதாலோ அல்லது குறுகிய வட்டத்திலான குழுக்களை அமைப்பதாலோ ஐக்கியம் கிடைப்பதில்லை.

ஆனால் இயேசுவில் உள்ள ஐக்கியம் என்பது ஒரே மாதிரியான தன்மையை குறிப்பதல்ல. எல்லாவற்றைப் பற்றியும் நாம் அனைவரும் ஒரே விதமாக சிந்திக்க வேண்டும் என்றோ, அல்லது ஒரே விதமாக செயல்பட வேண்டும் என்றோ அது அர்த்தப்படுத்துவதில்லை.

சிறிய கருத்துவேறுபாடுகளும் ஒவ்வொருவரிடமும் உள்ள வெவ்வேறு வரங்களும், கிறிஸ்துவை மையமாக கொண்டிருக்கும்போது, பிளவை ஏற்படுத்துவதற்கு பதிலாக ஒற்றுமையையே உருவாக்குகின்றன(1 கொரி. 12:12-13, 25, 27).

திருச்சபையில் ஐக்கியம் என்பது, சுயத்தை மரித்து இயேசுவுக்காக வாழ்வதன் மூலமே அடையப்படுகிறது.

# ஞானமும் பக்குவமும்

"மேலும், சகோதரரே, நான் உங்களை ஆவிக்குரியவர்களென்று எண்ணி உங்களுடனே பேசக்கூடாமல், மாம்சத்துக்குரியவர்களென்றும், கிறிஸ்துவுக்குள் குழந்தைகளென்றும் எண்ணிப் பேசவேண்டியதாயிற்று." (1 கொரிந்தியர் 3:1)

பக்குவமில்லாத கிறிஸ்தவர்களை பவுல், "கிறிஸ்துவுக்குள் குழந்தைகள்," "மாம்சத்துக்குரியவர்கள்" (1 கொரிந்தியர் 3:1) என்கிறார். இவ்வகையான கிறிஸ்தவர்கள் இயேசுவை விட மக்கள் மீதே அதிக கவனம் செலுத்துகிறார்கள். மற்றவர்களை புறகணித்து சில தலைவர்களுக்கு அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் அளிக்கப்படும்போது, திருச்சபையை பிளவுப்புடுத்தும் குழுக்கள் உருவாகின்றன. இது பக்குவமின்மையின் விளைவாகும். எனவே, கிறிஸ்துவுக்குள் பக்குவத்தை அடையுமாறு பவுல் நம்மை அழைக்கிறார் (1 கொரிந்தியர் 2:6).

## பக்குவமின்மை



அவர்கள் குழந்தைகள் போன்றவர்கள் (1 கொரி. 3:1)



அவர்கள் பாலை உண்ணத்தக்கவர்கள்(1 கொரி. 3:2)



அவர்கள் மாம்சத்திற்குரியவர்கள்(1 கொரி. 3:3)



அவர்கள் மற்றவர்களின் கருத்துக்களால் ஈர்க்கப்படுகிறார்கள் (1 கொரி. 3:4)

## பக்குவம்



அவர்கள் பெரியவர்கள் (1 கொரி. 14:20)



அவர்கள் பலமான ஆகாரம் உண்ணத்தக்கவர்கள் (எபி. 5:14)



அவர்கள் ஆவிக்குரியவர்கள் (1 கொரி. 2:13)



அவர்கள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவர்கள் (1 கொரி. 2:14)

# சேவையும் தாழ்மையும்

**“இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரனென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன்.” (1 கொரிந்தியர் 4:1)**

இன்றைய காலத்தைப் போலவே, முதலாம் நூற்றாண்டிலும் மக்கள் அரசியல், தத்துவம், மதம், மற்றும் பிற நம்பிக்கைகளின் அடிப்படையில் பிரிந்திருந்தனர். இந்த சிந்தனை முறை திருச்சபைக்குள் ஊடுருவி பிரிவினையை ஏற்படுத்துவதை நாம் எவ்வாறு தடுக்கலாம்?









தலைவரின் மனப்பான்மை முக்கிய பங்காற்றுகிறது. திருச்சபை பொறுப்பாளர்களாக தங்களுக்குள்ள பங்கை தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் திருச்சபையின் உரிமையாளர்கள் அல்ல; அவர்கள் கிறிஸ்துவுக்காக அதை நிர்வகிக்கிறார்கள்.

திருச்சபையின் தலைவர் இயேசுவே, மற்ற அனைவரும் “கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்” (1 கொரி. 4:1) அதை வழிநடத்துகிறார்கள்.





பணிபுரியும் ஊழியன் தன் எஜமான் நடந்துகொள்வதை போலவே நடந்துகொள்ள வேண்டும்: அதாவது, மற்றவர்களுக்கு பணிவிடை செய்வதற்காக தன்னை தாழ்மையுடன் அர்ப்பணிக்க எப்போதும் தயாராக இருக்க வேண்டும் (பிலிப். 2:3-8).

தலைவர்கள் மட்டுமல்லாமல், ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினரும் இவ்வாறு செயல்பட்டால், சபையில் எத்தகைய ஒற்றுமை நிலவும்.

# தலைவர்கள் மீதான மரியாதை

“மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம்.” (1 கொரிந்தியர் 4:2)




தலைவர்களை சுற்றி போட்டிகளும் பிரிவினைகளும் நிலவுகின்றன என்பதற்காக அவர்களை நாம் நிராகரிக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. மாறாக, கொரிந்துவில் அப்பொல்லோ ஆற்றிய ஊழியத்தையும் அவரது பணியையும் பவுல் ஆதரித்து அவருக்கு ஆதரவாக நின்றார் (1 கொரி. 3:5-6; 4:6; 16:12).



தலைவர்கள் உண்மையுடன் செயல்படும்போது, அவர்கள் மரியாதைக்குரியவர்களாக திகழ்கிறார்கள் (1 கொரி. 4:2; 1 தீமோ. 5:17). ஆனால் அந்த மரியாதை அவர்களுக்கு கிடைக்காத போதும் அவர்கள் உண்மையுள்ளவர்களாகவே நிலைத்திருக்கிறார்கள், ஏனெனில், மனிதர்கள் அல்ல, தேவனே தங்களை நியாயந்தீர்க்க வேண்டும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள் (1 கொரி. 4:3-4).



ஸ்பெயினில் பணியாற்றிய முதல் இறைபணியாளர்கள் ஃப்ராங்க் மற்றும் வால்டர் பாண்ட ஆவார். வால்டர் 1914ஆம் ஆண்டில் ஜாயென் நகரில் தனது விசுவாசத்திற்காக உயிர் துறந்தார்



கிறிஸ்தவ தலைவர்கள் இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி, தங்கள் சகோதர சகோதரிகளுக்காக துன்பங்களை சகிக்கவும், தேவைப்பட்டால் தங்கள் ஊழியத்திற்காக உயிரை தியாகம் செய்யவும் மனமுள்ளவர்களாக இருக்கிறார்கள் (1 கொரி. 4:11-13; 2 கொரி. 11:23-28).

தலைவர்களோ அல்லது உறுப்பினர்களோ ஒருவருக்கொருவர் சண்டையிடவோ வாதிடவோ அழைக்கப்படவில்லை, மாறாக, இயேசுவை புகழ்வதிலும் சிலுவையின் செய்தியை பிரசங்கிப்பதிலும் ஒன்றிணைந்து செயல்படவே அழைக்கப்பட்டுள்ளனர்.

“கிறிஸ்துவைப் போன்ற சகிப்புத்தன்மையின் ஆவியைத் தவிர, திருச்சபையில் முழுமையான ஐக்கியத்தை வேறெதுவும் நிலைநாட்ட முடியாது. சாத்தான் பிரிவினையை விதைக்கக்கூடும்; ஆனால் முரண்படும் தரப்பினரை ஒன்றிணைக்க கிறிஸ்துவால் மட்டுமே முடியும்... திருச்சபையின் தனிப்பட்ட ஊழியர்களாகிய நீங்கள் தேவனை எல்லாவற்றிற்கும் மேலாகவும், உங்கள் அயலாரை உங்களைப் போலவும் நேசிக்கும்போது, ஐக்கியத்தை நிலைநாட்டக் கடினமான முயற்சிகள் எதுவும் தேவைப்படாது; கிறிஸ்துவுக்குள் ஒருமைப்பாடு நிலவும்; புறங்கூறும் செவிகள் அடைக்கப்படும்; யாரும் தங்கள் அயலார் மீது பழி சுமத்தமாட்டார்கள். திருச்சபை உறுப்பினர்கள் அன்பையும் ஐக்கியத்தையும் போற்றி, ஒரு பெரிய குடும்பமாகத் திகழ்வார்கள். அப்போது, தேவன் தம் குமாரனை இவ்வுலகிற்கு அனுப்பினார் என்பதற்குச் சான்றளிக்கும் அடையாளத்தை நாம் உலகிற்கு வெளிப்படுத்துவோம்.”

எலன் ஜி உவைட் (ரி.்.பளக்டிங் க்றைஸ்ட் ஜூலை 5)